T-UN-394

# திருக்குறள் வகுப்பை எப்படி நடத்துவது

# HOW TO RUN A TIRUKKURAL CLASS

இ. வி. சிங்கன்.



தாய்: [illegible]! திருக்குறள் வகுப்புக்கு போகவேண்டும். எழுந்திரு
மகன்: சரி [illegible].

திருக்குறள் தமிழர்களின் வாழ்க்கை நூல். திருக்குறள் தமிழர்களின் மனவியல் நூல். திருக்குறள் தமிழர்களின் முப்பெரும் கோட்பாடுகளை அறம்– பொருள்– இன்பம்– ஐயமற விளக்கிடும் நூல். திருக்குறள் பாக்களை எடுத்தாளாதவர் எவருமிலர். அப்பாக்களை ஒலிக்காத நூல்களில்லை; நூலாசிரியர்கள் இல்லை.

திருக்குறள் பாக்களை– கருத்தைத் தமிழகத்தில் பரப்பிட பல பெரியார்கள், அறிஞர்கள், நாவலர்கள், கலைஞர்கள் அன்றும் இன்றும் தொண்டாற்றி வருகின்றனர். இவண்— மலேசியாவில்– திருக்குறள் வகுப்பு நடத்துவதன் மூலம் இல்லந்தோறும் திருவள்ளுவரின் திருப்பெயர் ஒலித்திட அருந் தொண்டாற்றி வருபவர் திரு. இ. வி. சிங்கம் என்றால் மிகையாகாது. அன்னார் கைம்மாறு கருதாது ஆற்றிடும் இத் தொண்டு தமிழர்கள் வாழ்நாழ் முழுவதும் எண்ணிடத்தக்கதாகும். திருக்குறள் படித்துத் திருந்திய வாழ்வு வாழ திரு இ. வி. சிங்கம் அவர்கள் ஊர்தோறும் சென்று ஆற்றிடும் தமிழ்த் தொண்டு நாளும் சிறக்க வேண்டும்.

பல இடைஞ்சல்களுக்கிடையே அவர் மேற்கொண்டுள்ள தொண்டு இப்பொந்தியான் நகரில் ஓரளவு வெற்றி தந்துள்ளது மனநிறைவு தருவதாகும். வள்ளுவத்தை– திருக்குறள் கருத்தை– மூலைமுடுக்கெல்லாம் பரப்ப வேண்டுமென்னும் தணியாத ஆர்வம் கொண்டுள்ள அத்தமிழ் நெஞ்சம் மேற்கொண்டுள்ள பணி சிறக்க தமிழ் நெஞ்சங்கள் துணை நிற்க வேண்டுமென்பது என் அவா.

அ. சுப்பிரமணியம்
தலைவர் பொந்தியான் தமிழ்ப்பள்ளி
தலைவர் மலாயன் இந்தியன் காங்கிரஸ்
—பொந்தியான்—.

## திருக்குறள் வகுப்பை எப்படி நடத்துவது?

'புத்தகம் நூறு புரட்டிக் கலைப்புற்றுச் சித்தம் கலங்கித் திகைப்பதேன்? வித்தகன் தெய்வப் புலவன் திருவள்ளுவர் சொன்ன பொய்யில் மொழியிருக்கும் போது' என்ற வினவை ஐம்பது ஆண்டுகளுக்கு முன் ஒரு அறிஞர் கேட்டார். இன்று நாம் அதே கேள்வியைக் கேட்டால் எங்களிடம் பல நூல்கள் இருக்கின்றன. எதைப் படிப்பது என்று தெரியாது என்று சிந்திக்காமல் கிளிப்பிள்ளை சொல்லுவது போல் சொல்லி விடுவார்கள்.

இந்த நூற்றாண்டில் ஆங்கில மொழியில் இருக்கும் இலக்கிய நூல்களைப் போல் எந்த மொழிகளிலும் கனவில் காணமுடியாத அளவில் இல்லை. இருந்த போதிலும் ஒரு ஆங்கிலேயனைக் கேட்டால் முகமலர்ச்சியுடன் எங்கள் முதல் நூல் செக்ஸ்பியர் என்பான். அதுபோல் கொய்தே என்பார்கள் ஜெர்மானியர்கள். டேன்டே என்பார்கள் இத்தாலியர்கள்.

இலக்கியத்தையும், சமயத்தையும் அடிப்படையாக வைத்துப் பல சமுதாயங்கள் நன்றாக முன்னேறியிருக்கினறன. இந்த ஒருமைப் பாட்டை வளர்ப்பதுதான் திருக்குறள் வகுப்பை எப்படி நடத்துவது என்ற நூலின் நோக்கம். திருக்குறள், திருக்குறள் அகராதி, திருக்குறள் கதைப் புத்தகம், மாணவர்கள், இடம், ஆசிரியர் இந்த ஆறும் அடிப்புடையாக இருந்தால் திருக்குறள் வகுப்பை யாரும் நடத்தலாம். குறட் பற்றும், ஆர்வமும் விடா முயற்சியும் தூண்டு கோலாக எப்போதும் இருக்க வேண்டும். வகுப்பு ஒரு பக்குவம் அடைந்தவுடன் சலிப்புத் தன்மை பிறக்கு முன் ஒரு மணி நேர அட்டவணையை வைத்துச் சொல்லிக் கொடுத்தால், திருக்குறள் வகுப்பை நிரந்தரமாக மகிழ்ச்சியுடன் நடத்தலாம்.

## கடவுள் வாழ்த்து (15 நிமிடம்)

### 2 நிமிடம் உடற் பயிற்சி

'உடம்பை வளர்த்தேன் உயிர் வளர்த்தேனே என்பது பொருள் நிறைந்த பொன்மொழி'.

பூனை, நாய் நன்றாக உறங்கிவிட்டு எழுந்து நடக்கு முன் ஒரு இரு அசைவுகளை எடுத்துவிட்டுச் செல்கிறது. அதுபோல் நாமும் செய்தால் சுறுசுறுப்புடன் உற்சாகமும் பிறக்கும்.

### 2 நிமிடம் மூச்சு எடுக்கும் பயிற்சி

இவை பேசும் போதும் பாடும்போதும் மூச்சைக் கட்டுப் படுத்தும்.

### 1 நிமிட அகவழிபாடு

தன்னைத் தான் உணர்ந்து கொள்ள அகவழிபாடு உதவியாக இருக்கும். அத்துடன் மன நிம்மதி, மன ஒருமைப்பாடு, நல்ல ஒழுக்கம் ஆகியவற்றை வளர்க்க இந்த வழிபாடு மிகவும் முக்கியம்.

### 10 நிமிடப் பாடல்

தேர்ந்தெடுத்த குறள் அதிகாரத்தை திருப்பித் திருப்பி சொல்லுவதால் ஓசை நயத்தை நன்றாக மனதில் பதியும்படி செய்யலாம். அல்லது தமிழ்ச் சமயப் பாடல்களைப் பாடலாம். அல்லது சமயத்தில் நம்பிக்கை இல்லாத இடத்தில் அல்லது சமயத்தைச் சொல்லிக் கொடுக்கக் கூடாது என்று கட்டளை யிடும் இடத்தில் தமிழ்ப் பாக்களைச் சொல்லிக் கொடுக்க லாம்.

## திருக்குறள் படிப்பு (30 நிமிடம்)

ஒவ்வொரு வாரத்திற்கு ஒரு திருக்குறள். ''குறளைப் படிப்பதற்குப் பதது'' முறைகள் அல்லது ''திடீர்த் திருக் குறள்'' வழிகளில் சொல்லிக் கொடுக்கலாம். அல்லது நூல் நிலையத்தில் இருக்கும் திருக்குறளை எடுத்து ஒரு வழியை அமைத்து கற்பித்துக் கொடுக்கலாம். நூல் நிலயத்தில் தகுதி யான நூல்கள் இல்லாவிட்டால் தமிழ் நூல் கடைகளில் புத்தகங்களை வாங்கிக் கற்பிக்கலாம்.

இரண்டு மாதத்திற்கு ஒரு தடவை திருவள்ளுவர் மாலையையும் திருவள்ளுவர் வரலாற்றையும் எடுத்துக் கூற வேண்டும். எரிந்த, புகைற்த எண்ணங்களை மாற்றி வள்ளுவம் என்ற ஒரே சிந்தனையை மனதில் உருவாக்கிக் கற்பிக்க வேண்டும்.

1330 குறட் பாக்களையும் குறிப்பிட்ட நாட்களில் சொல் லிக் கொடுக்க முடியாது. கற்றுக் கொடுத்தாலும் மனதிலும் நிற்காது. எனவே ஒரு இரு தடவை எல்லாக் குறட் பாக்களை யும் படிததுவிட்டு தற்சமய சூழ்நிலை வாழ்க்கைக்கு உதவியாக இருக்கிற பாற்களையே கற்பிக்க வேண்டும்.

உதாரணமாக மாணவர்களுக்கு ஒழுக்கமுடைமை, அடக்கமுடைமை, கல்வி, கல்லாமை, முயற்சி, சோம்பல் அதிகாரங்கள் முக்கியமாக இருக்கும்.

## மாணவர்கள் பங்கு பெறுதல் (15 நிமிடம்)

இந்தப் பகுதியை மாணவர்கள் மிகவும் ஆர்வத்துடன் எதிர் பார்ப்பார்கள். அவர்களை 1, 2, 3 அல்லது 5 நிமிடத் திற்கு பள்ளிக்கூடம், ஆசிரியர், பொழுது போக்கு என்ற பொருளில் பேசவிட்டுத் தைரியத்தையும், பேச்சுக் கலையை யும் வளர்க்க வேண்டும். குறிக்கோளாக குறளை வைத்து ஒரு கதையை சொல்லத் தக்க நிலையை உருவாக்க வேண்டும்.

சிங்கப்பூர், மலேசியாவில் கடந்த இருபது ஆண்டுகளாக கதை, கட்டுரை, கவிதை, பேச்சுப் போட்டிகளில் கலந்து கொள்பவர்கள் ஒரு சிலரே. அதுவும் குறிப்பிட்டவர்களே திரும்பத் திரும்ப பரிசுகளைப் பெறுகிறார்கள். அல்லா விட்டால் ஏற்பாட்டைச்செய்பவர்களின் பிள்ளைகள், உறவினர் கள், நண்பர்கள் பரிசுகளை தட்டிச் செல்கிறார்கள். போதிய பயிற்சியும், மனத் தைரியமும், ஆதரவும், இல்லாதபடியால் மற்றப் பிள்ளைகள் பரிசுகளைப் பெற முடியாமல் போய் விடு கிறது. இந்த நிலையை மாற்றத்தான் திருக்குறள் வகுப்பு வருங் காலத்திலும் சமுதாயத்தைக் குறை கூறாமல் படித்த வன், படியாதவன், பணககாரன், பிச்சைக்காரன், முதலாளி, தொழிலாளி யாவரும் இனத் தொண்டில் பணியாற்ற வேண் டும்.

ஆணடொன்றுக்கு ஒரு விழாவை ஓடி, ஆடிப் பரபரப்பாக நடத்திக் கொண்டாடுவது கடினமான செயல் அல்ல. வாரந் தோறும், மாதந்தோறும் 52 ஞாயிறு 52 மணி நேரம் ஒரு வகுப்பை நடத்துவது யானையைக் கட்டி தீனி போட்டது போல் ஆகும்.

ஆனபடியால் குறட் பற்று உள்ளவர்கள் ''குருடர்கள் உல கத்திற்கு ஒரு கண்ணுடையவன் மன்னன்'' என்று கற்றதை மனததில் வைத்து வாரந்தோறும் கற்பிக்க முன்வர வேண்டும் இதுவே இன்றைய சமுதாயம் கேட்கும் அரும்பெருந் தொண்டு.

தமிழின் பெருமையைப் பற்றி பேசிவிட்டு பல அன்னி யர்கள் பணம் சம்பாதித்து விட்டுப் போயிருக்கிறார்கள். இனி யாவது இங்கு பிறந்தவர்கள் திருக்குறளை நன்கு கற்றுப் போதிய அறிவைப் பெற்று அவர்கள் சேமிப்பையும் அதி கரிக்க வேண்டும்.

போட்டிகளின் தரம் உயர உயர தமிழும், சமுதாயமும் உயரும். திருக்குறள் வகுப்பு எப்படி நடத்துவது என்ற கேள் விக்கு ஏழு ஆண்டுகளுககு மேல் வகுப்பை நடத்தி கண்டு பிடித்த சரியான விடையே நான் மேலே குறிப்பிட்டுள்ள முறையாகும். வெற்றி பெறுவதற்கு ஏற்ற இச்சிறந்த வழியைப் பின் பற்றிப் பாருங்கள் பலன் நிச்சயமாகக் கிடைக்கும்.

8. 4. 1978

இ. வி. சிங்கன்

60

மாணவர்கள்
பங்குபெறுதல்
**Student Participation**

1. சொற்பொழிவு—
   Talk

   பள்ளிக்கூடம்
   ஆசிரியர்
   பொழுது போக்கு

2. குறள் கதை
3. ஓவியம்
   Drawing
4. குறள் விளையாட்டு

கடவுள் வாழ்த்து
**In Praise of God**

1. உடற் பயிற்சி
   Exercise
2. அகவழிபாடு
   Meditation
3. தேர்ந்தெடுத்த குறள்
   Selected Kural
4. தமிழ் சமயப் பாடல்
   Tamil Religious Songs
5. தமிழ்ப் பாக்கள்
   Tamil Poems

45 | 15

குறள் படிப்பு

1 திருவள்ளுவர் மாலை
2 திருவள்ளுவர் வரலாறு
3. திருக்குறள் வரலாறு
4 தேர்ந்தெடுத்த குறள் கதை
  அல்லது பட்டறிவுக் கதை
5. குறள் விளக்கப் படம்
6. மொழிபெயர்ப்பு ஆங்கிலம்,
   மலாய், சீனம்.

KURAL STUDY

1. In Praise of Valluvar
2. Biography
3 Tirukkural Book
4 Chosen Kural Story or
  Experience
5 Illustration
6 Translation English,
  Chinese, Malay.

30

# எங்கள் நேரம் ஒரு மணி

# கட்டளை 1

திருக்குறள் மூலம்

# கட்டளை 2

திருக்குறள் விளையாட்டு

# கட்டளை 3

திருக்குறள் அகராதி

# கட்டளை 4

திருக்குறள் தமிழ்மரபுரை

# கட்டளை 5

விளக்கப் படம்

# கட்டளை 6

திருக்குறள் கதை

## கட்டளை 7

திருக்குறள் மொழி பெயர்ப்பு

## கட்டளை 8

திருக்குறள் அதிகார விளக்கம்

## கட்டளை 9

இதர நூல்களுடன் ஒப்பிடுதல்

## திருக்குறள் வகுப்புத் தேர்வு

200 புள்ளிகளை நீங்கள் பெற முடிந்தால், திருக்குறள் வகுப்பு ஆசிரியர்களாகலாம்.

1. திருவள்ளுவர் என்பவர் யார்?
2. அவர் தம் பெரும் முயற்சி எது?
3. அவர் எத்தனை நூல்களை இயற்றினர்?
4. அவை யாவை?
5. திருக்குறளில் எத்தனை குறட்பாக்கள் உள்ளன?
6. நீங்கள் எத்தனை குறட்பாக்களைப் பயின்றிருக்கிறீர்கள்?
   ( ) ஒன்றுமில்லை ( ) 10 ( ) 60 ( ) 100க்கு மேல்?
7. நீங்கள் திருக்குறளை எப்பொழுது பயில்வீர்கள்?
   ( ) தினமும் ( ) ஆண்டிற்கு ஒரு முறை
   ( ) வாரத்திற்கு ஒரு முறை ( ) எப்பொழுதாவது
8. திருக்குறட்பாக்களை உங்களால் மற்றவர்களுக்கு விளக்க முடியுமா? முடியும் / முடியாது
9. திருக்குறளைப்பற்றி உங்களால் எவ்வளவு கருத்துக் களை எழுத இயலும்?
   ( ) 10 வாக்கியங்கள் ( ) 150 சொற்கள்
   ( ) 500 சொற்களுக்குமேல்
10. வாரந்தோறும் ஒரு மணி நேரம் உங்களால் திருக்குற ளைப் படிக்க செலவிட முடியுமா?
    முடியும் / முடியாது
11. ஆண்டுதோறும் 52 வாரங்கள் தொடர்ந்து உங்களால் திருக்குறள் வகுப்பை நடத்திவர முடியுமா?
    ஆம் / இல்லை

## பகுதி 2

1. திருக்குறளின் உதவியின்றி ஒரு குறளை உங்களால் கூற முடியுமா?
2. அக்குறளின் எண்ணையும் அதன் அதிகார எண்ணையும் உங்களால் கூற முடியுமா?
3. அக்குறளில் உள்ள ஒவ்வொரு சொல்லையும் விளக்கிக் கூற முடியுமா?
4. உங்கள் முயற்சியால் குறலொன்றிற்கு விளக்கம் கூற முடியுமா?
5. உங்களால் ஒரு குறளுக்கு விளக்கப் படம் தயாரிக்க முடியுமா?
6. குறளை வேறு மொழியில் மொழி பெயர்ப்பு செய்ய முடியுமா?
7. குறளுக்கு விளக்கக்கதை கூற முடியுமா?
8. ஒரு அதிகாரத்தை அடிப்படையாக வைத்து சொற்பொழிவு ஆற்ற முடியுமா?
9. திருக்குறளுக்கும் வேறு நூல்களுக்கும் உள்ள ஒப்புமைகளையும், வேறுபாட்டையும் ஆராய்ந்து 10 நிமிடங்களுக்கு ஒரு சொற்பொழிவு ஆற்ற முடியுமா?
10. அன்றாட வாழ்க்கையில் மாணவர்கள் எடுத்தியம்புமாறு திருக்குறளை திறம்பட பயிற்றுவிக்க முடியுமா?

## திருக்குறள் வகுப்பை நீங்களும் நடத்தலாம்.

தேவை

1. திருக்குறள்
2. அட்டவணை
3. மாணவர்கள்
4. இடம்
5. ஆசிரியர்

..................................................................................

### எங்கள் குறிக்கோள்

1. ஆன்மீக வளர்ச்சி
2. பொருளாதார வளர்ச்சி
3. சமூக வளர்ச்சி

..................................................................................

"பொருள் இல்லார்க்கு இவ்வுலகம் இல்லை"

குறள்

உங்கள் பொருளாதார நிலையை மாற்றுவதற்கு தொழிலி யல் நூல்களைப் திருப்பித் திருப்பிப் படியுங்கள்.

600 நீங்களும் சிறு தொழில் நடத்தலாம்

610 மருத்துவக் கலை

612 குழந்தையின் பிறப்பு

613 யோகாசனப் பயிற்சிகள்

613 தொந்தியைக் குறைக்க வழிகள்

621 வாக்கி டாக்கி

621 தொலைக் காட்சி

621 எலெக்டிரிக் ஒயரிங்

621 ரேடியோ ரிப்பேரிங்

629 மோட்டார் கார் ரிப்பேரிங்

635 உங்கள் வீட்டுத்தோட்டம்

641 சமயற்கலை

646 தையற்கலை

649 குழந்தை வளர்ப்புக் கலை

651 கடிதம் எழுதுவது எப்படி?

652 தட்டெழுத்துப் பொறியியல் நூல்

655 புத்தகத்தின் கதை

658 வியாபாரம் செய்வது எப்படி?

670 புதிய தொழில் முறைகள்

681 கடிகாரம் பழுதுபார்ப்பது எப்படி?

681 அச்சுக் கலை

690 நீங்களே உங்கள் வீட்டைக் கட்டலாம்

694 தச்சு வேலை

**Order your copies from:**

**E. V. S. ENTERPRISES**

**G.P.O. Box 1995**

**Republic of Singapore**